## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி 2013)

10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

# ECOS 3102 Financial Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01.(அ) அமைப்புரீதியான பணத்தின் பிரிவுகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் பணநிரம்பலில் இடம்பெறும் $M_2b$ என்ற அம்சத்தினை விளக்குக.

(05 புள்ளிகள்)

(இ) உயர்வலுப் பணத்தினை வரையறுக்குக.

(05 புள்ளிகள்)

(ஈ) ஒரு பொருளாதாரத்தில் பணநிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குக.

(08 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

02.(அ) ஒரு நாட்டின் நிதி முறைமைக்கு அந்நாட்டு வணிகவங்கிகள் வழங்கும் பல்வேறு பணிகளை விபரிக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) பணவாக்கம் என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
ஒதுக்குவீதம் 5 ஆகவும் ஆரம்பவைப்பு 500 ரூபாவாகவும் உள்ளபோது பணவாக்கம், கடன் அளவு என்பவற்றைக் காண்க.

(08 புள்ளிகள்)

(இ) "தகவல் தொழிநுட்ப வளர்ச்சியானது வணிகவங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கான சேவைகளை இலகுபடுத்தி விரிவுபடுத்தியுள்ளது." ஆராய்க.

(10 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

03.(அ) கேள்வித்தூண்டல் பணவீக்கத்திற்கும் செலவுத்தூண்டல் பணவீக்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) விலைச்சுட்டெண் கணிக்கும்போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் எவை?

(05 புள்ளிகள்)

(இ) கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டெண்ணில் காணப்படும் பிரதான குறைபாடுகள் எவை?

(05 புள்ளிகள்)

(ஈ) இலங்கையின் பணவீக்கத்தின் அண்மைக்காலப் போக்கினை ஆதாரங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

04.(அ) "கெயின்ஸ் திரவப்பொறி நிலையைக் காரணம் காட்டி பணக்கொள்கை உயர் வெளியீட்டினை அடைவதில் செயற்றிறனற்றது என வாதிடுகிறார்." இக்கூற்றினை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) பிறீட்மனின் (Fridman) கருத்துப்படி பணத்துக்கான கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகள் எவை?

(05 புள்ளிகள்)

(இ) பிறீட்மனின் (Fridman) நவீன பணக்கணியக் கோட்பாட்டினை சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

05.(அ) இலங்கையில் நிதியியல் முறைமையின் கட்டமைப்பினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) பணச்சந்தையினை வரையறுத்து அவற்றின் உபசந்தையினை விளக்குக.

(10 புள்ளிகள்)

(இ) முதனிலைச் சந்தையினை (Primary Market) வரையறுக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுக்கு சிறுகுறிப்பெழுதுக.

(அ) சர்வதேச நாணய நிதியம் (IMF)
(ஆ) மூலதனப் பாதீடிடல்
(இ) மத்தியவங்கியின் மரபுக்கடன் கட்டுப்பாடு
(ஈ) பணச்சுருக்கம்
(உ) பணக்கணியக் கோட்பாடு

(5x5=25 புள்ளிகள்)